# கோட்பாட்டியல் நோக்கில் தொல்காப்பியம்

பதிப்பாசிரியர்

முனைவர் ப. முருகன்

Scanned by CamScanner

# கோட்பாட்டியல் நோக்கில் தொல்காப்பியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நல்கிய நிதியில்
தமிழ்த்துறை & ஆய்வு மையம், அரசுக் கல்லூரி, சித்தூர்,
நடத்திய (26-28 பிப்ரவரி 2015) தேசியக் கருத்தரங்கில் அளிக்கப்பட்ட
ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு.


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | முனைவர் ப.முருகன்<br>கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,<br>தமிழ் உதவிப் பேராசிரியர்,<br>தமிழ்த்துறை & ஆய்வு மையம்,<br>அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு - 678104. |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி 2017 |
| நூல் அளவு | : | A5 |
| ISBN No. | : | 978-93-86176-66-0 |
| பக்கங்கள் | : | 218 + 10 |
| வெளியீடு | : | செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்<br>மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்,<br>இந்திய அரசு, சென்னை. |
| | : | தமிழ்த்துறை & ஆய்வு மையம்,<br>அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு - 678104. |
| நூல் வடிவமைப்பு | : | முனைவர் த.ராஜ்குமார் |
| அச்சிட்டோர் | : | காவேரிடெக் கணிப்பொறி அச்சுக்கூடம்<br>21/2 ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி. |


Scanned by CamScanner

13. இந்தியக் கவிதையியல் நோக்கில் தொல்காப்பியம்
- திரு. கு. பத்மநாபன் 117

14. சங்க இலக்கியத்தில் களவியல் கோட்பாடு
- முனைவர் சி. வாசுகி 127

15. தொடரியல் கோட்பாடு
- முனைவர் அ. ஹெப்ஸி ரோஸ் மேரி 137

16. அகத்திணையியல் கோட்பாடு
- முனைவர் ப. சாந்தி 146

17. ஒப்பியல் நோக்கில் தொல்காப்பியம் -
புறப்பொருள் வெண்பாமாலை வெட்சித்திணை
- முனைவர் க. சிவமணி 151

18. கோட்பாட்டியல் நோக்கில் மெய்ப்பாட்டியல்
- முனைவர் த. கவிதா 156

19. சமூகவியல் நோக்கில் தொல்காப்பியம்
- முனைவர் அ. விஜயன் 161

20. அணிக்கோட்பாடு
- ச.அ.சுஜா 171

21. புது வரலாற்றியல் நோக்கில் தொல்காப்பியம்
- க.கதிரவன் 181

22. தொல்காப்பிய சொல்லதிகார உரைகளில்
பொருள்கோடல் நிலைகள்
- ர.ரதி 192

23. கிரேக்கக் கவிதையியல் நோக்கில் தொல்காப்பியம்
- பி. பிரதீப் குமார் 200

24. அணி இலக்கண வளரச்சிக் கோட்பாடு
- ச. பிரபாகரன் 209

25. ക്രിയാരൂപനിഷ്പത്തി മലയാളത്തിലും തമിഴിലും
- ഡോ: സജീവ് കുമാർ. എസ്. 215


Scanned by CamScanner

# அணிக்கோட்பாடு

**ச.அ.சுஜா**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

20

கொள்கையின்றி உலகில் எந்த உயிரினமும் வாழ இயலாது. யாரைக் கேட்டாலும் "எனக்குன்னு ஒரு கொள்கை இருக்கு. அதுப்படி நான் போறேன்" என்பார்கள். மனிதனின் மனதையும் உடலையும் அவன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அவனுக்கென்று சில கொள்கைகள் உண்டு. அதே போன்று அகமும் புறமும் சிறப்பாய் அமைப்பதற்கு சில கோட்பாடுகள் உள்ளன.

"எள்ளினின்று எடுபடும் எண்ணெய்போல
இலக்கியத்தினின்று தோன்றுவது இலக்கணம்"

அந்த இலக்கியத்தைப் படைப்பதற்கு சில கோட்பாடுகள் இலக்கணத்துள் வரையறுக்கப்பட்டுள்ளன. வாழ்வியலுக்கு இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் கண்டது தமிழ் மொழி. இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர் தமிழர். அந்த இயற்கை இயங்கியல் வழியில் தோன்றிய மொழி தமிழ்மொழி அதன் ஒலியும் சொல்லும் வரிவடிவும் பொருளும் இயற்கை வழி வந்தவை.

"செதுக்கிச் சிலை வடிக்க உளியும்
ஓவியம் தீட்டத் தூரிகையும் போல
நூல் படைக்கத் தேவை 'எழுத்து' "

அந்த எழுத்தின் வகை முதல் நூலின் உத்திகள் வரை இலக்கியம் படைக்கவேண்டிய பன்முகப் பார்வையையும் தரும் நூல் தொல்காப்பியம்.

ஐந்திலக்கணங்கள் பேசும் மொழி தமிழ்மொழி. தமிழில் பழமையான இலக்கண நூலாகக் கூறப்படுவது தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள தொல்காப்பியத்தில் சொல்லப்படாத கோட்பாடுகள் இல்லை.

'எல்லாப் பொருளும் இதன் பாலுள' எனத் திருக்குறளை எடுத்துரைப்பது போல, எல்லாக் கோட்பாடுகளும் இதல் உள எனத் தொல்காப்பியத்தையும் கூறலாம். அறிவியல், கணிதவியல், உளவியல், நாட்டுப்புறவியல் என அனைத்துத் துறைகளையும் எடுத்துரைக்கிறது. இயல், இசை, நாடகம் என முத்தமிழுக்குரிய கோட்பாடுகளையும் எடுத்துரைக்கிறது.



Scanned by CamScanner